பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

04 08 2026 6 45

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உஸ்பெகிஸ்தான் உடனான பன்முக ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து அந்நாட்டு அமைச்சருடன் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் விரிவான ஆலோசனை நடத்தியுள்ளார்.

2. கர்நாடக மாநிலம் கபினி அணையில் இருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் இன்று அதிகாலை தமிழக எல்லையான பிலிகுண்டுலுவை வந்தடைந்தது.

3. நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குறை கூறியுள்ளார்.

4. திருச்சி சமயபுரம் அருகே நேரிட்ட சாலை விபத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

5. தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

உஸ்பெகிஸ்தான் உடனான பன்முக ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. Saidov Bakhtiyor Odilovich உடன் ஆலோசனை நடத்தியதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உஸ்பெகிஸ்தான் அமைச்சர் உடனான சந்திப்பு குறித்து சமூக வலைதளத்தில் டாக்டர் ஜெய்சங்கர் பதிவிட்டுள்ளார்.

எரிசக்தி, உள்கட்டமைப்பு, வர்த்தகம், பாதுகாப்பு, கல்வி மற்றும் கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவது தொடர்பாக விரிவான ஆலோசனை நடத்தியதாக அவர் கூறியுள்ளார்.

பிராந்திய அளவிலான சவால்களை எதிர்கொள்வது குறித்தும், உஸ்பெகிஸ்தான் அமைச்சருடன் ஆலோசித்ததாக டாக்டர் ஜெய்சங்கர் அதில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் அதிக பதக்கங்களை பெற்ற நாடுகளில் 4வது இடத்தை இந்தியா பிடித்திருப்பது மகிழ்ச்சியான தருணம் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைப் பதிவிட்டுள்ள அவர், கிளாஸ்கோவில் நிறைவடைந்த இந்தப் போட்டிகளில் இந்தியா சிறப்பான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

2030ஆம் ஆண்டு காமன்வெல்த் போட்டிகளை அகமதாபாதில் நடத்துவதற்கான பொறுப்பையும் ஏற்றிருப்பதை அவர் கூறியுள்ளார்.

இந்த வெற்றியின் மூலம் இந்தியா புதிய உயரத்தை எட்டியிருப்பதாகவும், அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதாகவும் திரு. அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அருகே அமைந்துள்ள தனியார் கண்ணாடி தயாரிப்பு நிறுவனத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதேபோல் அதே பகுதியில் அமைந்துள்ள கார் உற்பத்தி தொழிற்சாலையையும் முதலமைச்சர் பார்வையிட்டு, பணிகள் குறித்து கேட்டறிந்தார்.

முதல்வருடன் அமைச்சர்கள் மற்றும் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் ஆய்வில் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

கர்நாடக மாநிலம் கபினி அணையில் இருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் இன்று அதிகாலை தமிழக எல்லையான பிலிகுண்டுலுவை வந்தடைந்தது.

வினாடிக்கு ஆயிரம் கன அடி தண்ணீர் வந்துகொண்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte – Dhandapani – 53 Sec)

<<<<>>>>

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குறை கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நாளிதழ்களில் வெளியாகியுள்ள முதலீட்டுத் தரவுகள் குறித்த புள்ளி விவரங்களைப் பகிர்ந்துள்ளார்.

மற்ற மாநிலங்களில் புதிய ஆட்சிகள் தொடங்கியவுடன் முதலீடுகள் பல மடங்கு உயர்ந்துள்ள நிலையில், தமிழகத்தில் தவெக அரசு பொறுப்பேற்ற பிறகு ஒட்டுமொத்த முதலீடுகள் முந்தைய காலாண்டைக் காட்டிலும் 74 புள்ளி 5 சதவீதமும், தனியார் முதலீடுகள் 77 புள்ளி ஆறு மூன்று சதவீதமும் சரிவைச் சந்தித்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

எனவே முதலமைச்சர் திரு. விஜய் சரியான தொழிற் கொள்கைகளை உருவாக்கி முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டும் என்று திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

தென்காசி மாவட்டம் குற்றாலம் மெயின் அருவியில் வெள்ளப்பெருக்கு குறைந்துள்ளதால் சுற்றுலாப் பயணிகள் குளிக்க விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

எனினும் பழைய குற்றாலம் அருவி, ஐந்தருவியில் தொடர்ந்து தடை நீடிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte – Senthil – 50 Sec)

<<<<>>>>

திருச்சி சமயபுரம் அருகே ஆம்னி பேருந்தும், காரும் மோதிய விபத்தில் சிறுவன் உட்பட 3 பேர் உயிரிழந்தனர். 7 பேர் காயமடைந்தனர்.

புதுக்கோட்டையைச் சேர்ந்த 5 பெண்கள் உட்பட 10 பேர் தஞ்சையில் இருந்து சமயபுரம் கோவிலுக்குச் சென்றபோது, சென்னை நோக்கி வந்த தனியார் பேருந்துடன் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<>>>>

தமிழகத்தின் வட கடலோர மாவட்டங்களிலும், டெல்டா மாவட்டங்களிலும் மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும் அடுத்த 2 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வட தமிழக கடலோர பகுதியில் நிலவும் கீழ்மட்ட வளிமண்டல தாழ்வுப் பாதை மற்றும் தென் தமிழக கடலோரத்தில் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக ராமநாதபுரம் மாவட்டத்திலும், நீலகிரி உள்ளிட்ட மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள மாவட்டங்களிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

சென்னையைப் பொறுத்தவரை ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

இந்தியா உள்ளிட்ட 60 நாடுகளுக்கு இறக்குமதி வரியை அதிகமாக விதித்துள்ள அமெரிக்க அதிபரின் நடவடிக்கைக்கு எதிராக அந்நாட்டின் 25 மாகாண அரசுகள் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளன.

------------

பங்களாதேஷுக்கான இந்திய தூதர் திரு. தினேஷ் திரிவேதி டாக்காவில் நேற்று அந்நாட்டு பிரதமரின் வெளியுறவுத்துறைக்கான ஆலோசகர் ஹுமாயூன் கபீரை சந்தித்துப் பேசினார்.

------------

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வரும் 17ஆம் தேதி தமிழகம் வருகிறார்.

------------

மூன்று மாநிலங்களில் நடைபெற்ற சட்டப்பேரவை இடைத்தேர்தல்களில் மக்கள் அளித்த தீர்ப்பை ஏற்றுக்கொள்வதாக பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

------------

பல்கலைக்கழக மாணவர்களுக்கான தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் இரண்டு வார கால இணைய வழி குறுகிய கால அனுபவ பயிற்சித் திட்டம் புதுதில்லியில் தொடங்கியுள்ளது.

------------

சென்னை சைதாப்பேட்டை திடீர் நகர் பகுதியில் மாநில அமைச்சர் திரு. ஆனந்த் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

------------

ஆடிப்பெருக்கை ஒட்டி, திருச்சி ஸ்ரீரங்கம் அம்மா மண்டபத்தில் காவிரி காவிரித் தாய்க்கு யானை மீது வைத்து சீர் வழங்கும் நிகழ்ச்சி விமரிசையாக நடைபெற்றது.

------------

கோவை மாவட்டம் வால்பாறை சுற்று வட்டாரப் பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக, அங்குள்ள ஆறுகள் மற்றும் நீர்வீழ்ச்சிகளில் சுற்றுலாப் பயணிகள் குளிக்கவோ, செல்ஃபி எடுக்கவோ கூடாது என்று மாவட்ட நிர்வாகம் எச்சரித்துள்ளது.

------------

திருவள்ளூர் மாவட்டத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு ஆட்சியர் திருமதி கவிதா உத்தரவிட்டுள்ளார்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

முதல் ஆட்டத்தில் திருப்பூர் - திண்டுக்கல் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி திண்டுக்கல்லில் இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது. இப்போட்டியில் 8 அணிகள் பங்கேற்கின்றன.

-------------

துரந்த் கோப்பை கால்பந்து போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் ஜம்ஷெட்பூர் - தில்லி அணியையும், மோகன் பஹான் சவுத் யுனைடெட் அணியையும் எதிர்கொள்கின்றன.

-------------

கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.

இப்போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த், மிதுன் மஞ்சுநாத், தன்யா ஹேமந்த், ஆகர்ஷி காஷ்யப் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

<<<<The End>>>>